# வவுனியா காடுகளில் நூற்றுக்கணக்கான பயணிகள் இராணுவத்தினரால் பணயம்

(பூநகரி)

நூற்றுக்கணக்கான கொழும்பு பிரயாணிகள் வவுனியாவிலுள்ள காடுகளில் இராணுவத்தினரால் பணயம் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவுக்கும் நொச்சி மோட்டைக்கும் இடையில் படையினரால் நடத்தப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 தை 30 றஜப் 26 இதழ்: 2

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 12-2-1991

## நேற்றும் கடும் தாக்குதல் படைகளுக்கு பலத்த சேதம்

### மக்கள் இடம்பெயர்வு

(வவுனியா)

வவுனியாவில் பல இடங்களில் நேற்றும் இராணுவத் தாக்குதல் அதிகரித்துக் காணப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்குமிடையில்

(4-ம் பக்கம் பார்க்க)

## படையினர் குவிப்பு

(வவுனியா)

வவுனியா எல்லைப் பகுதி முகாமில் பெரும் தொகையில் படையினர் குவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா நகரிலிருந்து

(4ம் பக்கம் பார்க்க)

# தேசிய ஒருமைப்பாடு என்ற ரீதியில் தனித்தமிழ் கிராமங்களில் சிங்கள, முஸ்லிம் குடியேற்றம்!

## திருமலையில் திட்டமிட்ட நடவடிக்கை

[திருமலை]

**திருகோணமலை மாவட்டத்திலுள்ள தனித் தமிழ் கிராமங்களில் தமிழர் பெரும்பான்மையை இல்லாமல் செய்யும் நோக்குடன் மூவினத்தவரும் இணைந்து வாழும் தேசிய ஒருமைப்பாடான மாதிரிக் கிராமம் என்ற ரீதியில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் குடியேற்றப்பட்டு வருகிறார்கள்.**

திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்நடவடிக்கையால் தமிழ்க் கிராமங்கள் பல முஸ்லிம் கிராமமாகவும், சிங்களக் கிராமமாகவும் மாறும் நிலை ஏற்பட்டுள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை நகருக்கு அண்மையில் உள்ள பாலையூற்றுக் கிராமத்தில் இந்தத் திட்டத்தின் அடிப்படையில் 75 வீடுகள் தேசிய வீடமைப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறை மாவட்டத்தில் 50 தமிழர்கள் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்திலுள்ள தாண்டியடியில் உள்ள சின்னத்தோட்டம் பகுதியில் ஐம்பது தமிழர்கள் ஸ்ரீலங்கா அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை இப்பகுதியைச் திடீரெனச் சுற்றிவளைத்த படையினர் அங்குள்ளோரில் ஐம்பது பேரைக் கைதுசெய்து தாண்டியடி முகாமிற்கு கொண்டு

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். நோக்கி வந்த பல லொறிகள் தாக்கப்பட்டு பொருள்கள் பறிமுதல்

(பூநகரி)

கொழும்பிலிருந்து யாழ்: நோக்கி வந்துகொண்டிருந்த லொறிகள் வவுனியாவிற்கும் நொச்சிமோட்டைக்குமிடையில் வைத்து இராணுவத்தினரால் சேதப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த லொறிகளில் கொண்டுவரப்பட்ட பெறுமதிமிக்க பொருள்கள் இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நூற்றுக்குமதிகமான லொறிகள், மினிபஸ்கள் தொடர்ந்து நடைபெற்று வரும் மோதலினால் யாழ்ப்பாணம் வரமுடியாது நொச்சி மோட்டையில் தரித்துநிற்கின்றன. (23)

### தமிழ் அகதிகள்

## தற்போது தாயகத்திற்கு அனுப்பப்படமாட்டார்கள்

(சென்னை)

இந்தியாவில் தங்கியிருக்கும் லட்சக்கணக்கான தமிழ் அகதிகள் உடனடியாக திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்றும் இது தொடர்பாக எத்தகைய முடிவும் எடுக்கப்படவில்லையென்றும் சென்னைக்கு விஜயம் செய்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் திரு. சுபோத்காந்த் சகாய் நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

மாநில சட்டசபை கலைக்கப்பட்டு, ஆளுநர் ஆட்சி ஏற்

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவம் பொலிஸ் பலி!

(கொழும்பு)

திருமலையில் நேற்று நடந்த மிதிவெடியில் ஒரு இராணுவமும், ஒரு பொலிஸும் பலியாகினர்.

## சட்டசபை தேர்தல் ஏப்ரலில் நடைபெறும்

(சென்னை)

தமிழக சட்டசபைத் தேர்தல் ஏப்ரல் நடுப்பகுதிக்கு முன் நடைபெறும் சாத்தியம் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய தேர்தல் தலைமை அதிகாரி திரு. ஷேட்டன் இதற்காக அடுத்த சில தினங்களில் தமிழகம் வரவுள்ளார்.

இதேவேளை தமிழகத்தில் புதிய தேர்தலைச் சந்திப்பதற்காக சகல கட்சிகளும் தமது பிரசாரக் கூட்டங்களை பரவலாக நடத்தி வருகின்றன. (சி)

## சுகாதார இலாகா கவலையீனம் யாழ். வைத்தியசாலைக்கு ஊசல் அனுப்பப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு சுகாதார இலாகாவின் கவலையீனத்தால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வரவேண்டிய ஊசலி நேற்று வந்த குமண கப்பலில் வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாமிலிருந்து தொடர்ந்து ஷெல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை இராணுவ முகாமிலிருந்து பொதுமக்கள் வாழும் குடியிருப்புகளைநோக்கி கடந்த சில தினங்களாக ஷெல் தாக்குதல் நடத்தப்படுகிறது.

இரவு நேரங்களிலேயே இச் ஷெல் தாக்குதல் இடம் பெற்றுவருகின்றன.

இச் ஷெல்கள் அரம்பன், புளியங்கூடல் போன்ற பகுதிகளில் விழுந்து வெடிக்கின்றன. (ஈ)

## இலங்கையில் 4,27,417 பேர் அகதிகளாக இருக்கிறார்கள்

[யாழ்ப்பாணம்]

இலங்கை முழுவதிலும் அண்மையில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்களின்படி 4 லட்சத்து 27 ஆயிரத்து 417 பேர் அகதிகளாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க கொழும்பு தலைமையகத்தில் அகதிகள் சம்பந்தமாக புள்ளிவிபர அறிக்கையிலே அண்மையில் சேகரிக்கப்பட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## சிங்களக் கிராமம் மீது இனந்தெரியாதோர் தாக்கு

(கொழும்பு)

சிங்களக் கிராமம் ஒன்று இனந் தெரியாதவர்களினால் தாக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள தமண என்ற கிராமத்தில் 10 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து அச்சத்தின் காரணமாகப் பல குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

## சர்வோதயம் தடை

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழ் அகதிகளுக்காக வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கிய ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான சமையல் பாத்திரங்கள் சர்

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


**சமூகக் கல்வி**

விற்பனையாளர் ஒருவர் சமூகக் கல்வி-ஆண்டு 11 (புதிய பாடத்திட்டம்) ஆக்கியோன்:- ந. தர்மபாலன். சகல புத்தக சாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (கி-4318)

**தவறிவிட்டது**

30-1-91 யாழ் / முற்றவெளிச் சந்தையடியில் ஒரு புதிய டயறியுடன் தேசிய அடையாள அட்டைகள் இரண்டு தவறி விட்டன. எ. செல்லையா 333581124 X. செ. தயாபரன் 700871177 V இவைகளை கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்: முருகன் இல்லம், இணுவில் கிழக்கு, சுன்னாகம். (கி- 4347)

**எண் ஜோதிடம்**

கல்வி தொழில் குடும்ப வாழ்வு என்பனவற்றின் முன்னேற்றமடைய உங்கள் பிறந்த ஆண்டு மாதம் திகதிக்கு ஏற்றவாறு பெயர் எண்ணை அமைத்துக்கொள்வதற்கு தொடர்பு கொள்ளவும். ஞாயிற்றுக்கிழமைகளில் பதிவு செய்தவர்கட்கு மட்டும். ஆலோசகர், லூடோ காமெனல், ஆஸ்பத்திரி வீதி, மூளாய். (கி-4348)


## மருந்துக் கலவையாளருக்கு இறுதிப் பரீட்சை நடைபெறவில்லை

(பண்டத்தரிப்பு)

யாழ்ப்பாண மாவட்டத்திலும் கிளிநொச்சி மாவட்டத்திலுமுள்ள அரசாங்க வைத்தியசாலைகள் பலவற்றில் மருந்துக் கலவையாளர் பதவிகள் வெற்றிடமாக உள்ளன.

கடந்த ஆண்டில் மருந்துக் கலவையாளர் பதவிகளுக்கு புதிதாக 10 பேர் தெரிவு செய்யப்பட்டு மருத்துத்துறை ஆதாரவைத்தியசாலையில் ஆறு மாத கால பயிற்சி வழங்கப்பட்டபோதிலும் இவர்களுக்கு இறுதிப் பரீட்சை நடாத்தப்படவில்லை. இதனால் இவர்களுக்கு நியமனம் வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி நடவடிக்கைமேற்கொள்ளுமாறு அரசாங்க மருந்துக் கலவையாளர் சங்க யாழ். கிளை யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளரை கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (72)

## சைக்கிள்களை நிறுத்தி இடையூறு செய்யாதீர்கள்

### விடுதலைப் புலிகள் வேண்டுகோள்

(உடுவில்)

சுன்னாகம் சந்தைப்பகுதியில் உள்ள வர்த்தகநிலையங்களுக்கு முன்னால் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்த வேண்டாமென தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளனர்.

வர்த்தக நிலையங்களுக்கு முன்னால் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்துவதனால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதுடன் விபத்துக்கள் நடைபெறவும் களவுகள் இடம்பெறவும் வாய்ப்புக்கள் ஏற்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அறிவுறுத்தல்களை மீறும் சைக்கிள்கள் தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்க தொண்டர்களினால் தூக்கிச்செல்லப்பட்டு பாதுகாப்பு நிலையத்தில் வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (109)

## 12 சைக்கிள் திருடியவர் வசமாக அகப்பட்டார்

[வடமராட்சி]

வடமராட்சியில் அதிகப்படியான சைக்கிள்கள் திருடிய கள்வன் ஒருவன் மக்களினால் பிடிக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

கரணவாயைச் சேர்ந்த ஒருவரே இதுவரை பன்னிரண்டு சைக்கிள்களை திருடி விற்றுள்ளார்.

இவர் வல்லை, பொலிகண்டி, சாண்டாசந்தை, உடுப்பிட்டி, பட்டாவடைத் தோட்டம், கலட்டி, குஞ்சர்கடை, மொட்டைப்புளியடி போன்ற இடங்களில் ஏமாற்றுமுறையில் சைக்கிள்களைக் கொள்ளையடித்துவிட்டு பதின்மூன்றாவது சைக்கிளை கொம்மந்தறை, கப்பர்மலை என்னுமிடத்தில் கடத்தியபோது மக்களால் பிடிக்கப்பட்டார். (51)

## ஆசிரிய ஆலோசகர் பதவி வெற்றிடம்

(உடுவில்)

மருதனமடம் கல்விக் கோட்டத்தினுள் கொத்தணி ஆசிரிய ஆலோசகர்களாக கடமையாற்றத் தகுதியுடைய ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஏழாலைக் கொத்தணியில் தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்ற ஒருவரும் சமூகக் கல்விப் பாட ஆசிரிய ஆலோசகராக கடமையாற்ற வசாவிளான். ஏழாலைக் கொத்தணிகளில் இருந்து தலா ஒவ்வொருவரும் தெரிவு செய்யப்பட விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இவற்றைவிட கோட்ட மட்டத்தில் நடனம், சைவசமயம் ரோமன் கத்தோலிக்கம் அல்லாத, இஸ்லாம் ஆகிய பாடங்களுக்கு தனித்தனி ஒவ்வொரு ஆசிரிய ஆலோசகர்களும் தெரிவுசெய்யப்பட உள்ளனர்.

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதியான ஆசிரியர்களிடம் இருந்து விண்ணப்பங்களை எதிர்வரும் 15ம் திகதிக்கு முன்பாக கொத்தணி அதிபர் ஊடாக மருதனமடம் கோட்டத்துக்கு அனுப்பிவைக்குமாறு உதவிக் கல்விப்பணிப்பாளர், திரு எஸ். தனஞ்செயன் அறிவித்துள்ளார். (109)

## விஷேட வகுப்பு

(நாவற்குழி)

தொலைக்கல்விமூலம் பயிற்சி பெறும் 89-91 கல்வியாண்டிற்கான ஆசிரிய மாணவர்களுக்கான விசேட வகுப்புகள் இம் மாதம் 16ம், 17ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.


## ஆனந்தா கலண்டர்

### மலிவு விலையில் பஞ்சாங்கக் கலண்டர்

1991-ம் ஆண்டுக்கு ஆனந்தா கலண்டர் நாளை புதன்கிழமை வெளிவருகிறது. தமிழ், ஆங்கிலத் திகதிகள், அரச வங்கி வர்த்தக பேசார விடுமுறைகள். அமாவாசை, பூரணை, ஏகாதசி, சதுர்த்தி, சஷ்டி, கார்த்திகை விரத தினங்கள் மற்றும் அட்டமி நவமி, பிற விசேட தினங்கள் யாவும் அடங்கியது. காலத்திற்கேற்ற சிக்கனக் கலண்டர், அழகிய வண்ணப்படங்கள் கொண்ட மட்டைகளுடன் விலை ரூபா. 22/- மட்டுமே. கடதாசித்தட்டுப்பாடு காரணமாக தெரிய பிரதிகளே அச்சிடப் பெறுவதால் விற்பனையாளர்கள் உடனே தொடர்பு கொள்க. விற்பனைக்கழிவுண்டு.

**ஆனந்தா புத்தகசாலை**

226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (கி-4346)


## பயிலுநர் ஆசிரியர் விண்ணப்ப படிவங்கள் பிழையாக நிரப்பப்பட்டன

(நாவற்குழி)

தேசிய கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் தொலைக்கல்வி பயிற்சிமூலம் பயிற்சி பெற விண்ணப்பித்திருந்த பயிலுனர் ஆசிரியர்களின் விண்ணப்பங்களில் பிழையாக நிரப்பப்பட்டுள்ளது விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட தொலைக்கல்விப் பிரிவுக்கு திருப்பியனுப்பப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அனுப்பியிருந்த ஆசிரியர்கள் தங்கள் விண்ணப்பங்களை இம் மாதம் 11ம் திகதிக்கும் 17ந் திகதிக்கு மிடையில் காலை 10.00 மணி முதல் 1.30 மணிவரை நேரில் வந்து பெற்று திருத்தி அனுப்புமாறு யாழ். மாவட்ட தொலைக்கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தெரிவித்துள்ளார். (107)

## பாடசாலை தவணை

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கான தவணைத்திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோட்டக்கல்வி அலுவலக பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் மூலம் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிவித்தலின்படி புதிய தவணைத் திகதிகள் வருமாறு:

முதலாம் தவணை 02-01-91 முதல் 05-04-91 வரை. இரண்டாம் தவணை - 06.05.91முதல் 02-08-91வரை மூன்றாம் தவணை 02-09-91 முதல் 06-12-91 வரை. (109)


### யாழ். பல்கலைக்கழகம், இலங்கை.

### எரிபொருள் விநியோக

## கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குப் பின்வரும் அளவு எரிபொருள் கொள்கலனில் விநியோகிப்பதற்குத் தகுதி வாய்ந்த விநியோகத்தர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படுகின்றன.

1. சாதாரண டீசல் வாராந்தம் 300 லீற்றர் அல்லது மொத்தம் 3000 லீற்றர்:
2. எஸ். ஏ. ஈ. 40 ரக எஞ்ஜின் ஒயில் வாராந்தம் 5 லீற்றர் அல்லது மொத்தம் 50 லீற்றர்:
3. மண்ணெண்ணெய் வாராந்தம் 200 லீற்றர் அல் மொத்தம் 2000 லீற்றர்.
4. பெற்றோல் வாராந்தம் 90 லீற்றர்:

வாராந்தக் கூறுவிலைகள் 30-04-1991வரை ஏற்புடையதாக இருத்தல் விரும்பத்தக்கது: ஆனால் கூறுகாரர்கள் விரும்பினால் எத்தகால எல்லை வரை இந்தக் கூறுவிலைகள் ஏற்புடையன எனக்குறிப்பிடலாம்.

விநியோகிக்கப்படும் எரிபொருளின் தரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன தரக்கட்டுப்பாட்டுக்கு அமைவாக இருக்கவேண்டும்:

கூறுவிலைகள் மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக ரூபா 5000/- பல்கலைக்கழக நிதியாளரிடம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் 21-02-91 காலை 10-00மணிக்கு முன் பல்கலைக்கழகப் பதிவாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் பல்கலைக்கழக நிதியாளருடன் தொடர்புகொள்ளவும். யாழ். பல்கலைக்கழக கேள்விச்சபையின் முடிவே இறுதியானதாகும்.

பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம். (எ-1092)


## ஜனநாயக மீட்புக்கு அன்னையர் முழக்கம்

[டாக்கா]

பங்களாதேஷ் பொதுத்தேர்தல் மார்ச் 2-ம் திகதி நடைபெறவிருக்கிறது. முன்னூறு தொகுதிகளையுடைய பங்களாதேஷில் இம்முறை முஜிபூர் ரகுமானின் இளையபுதல்வி ஜனாப் ஷேக் ஹசினா அம்மையார் [வயது48) தலைமைதாங்கும் அவாமிலீக் கட்சிக்கு பெரும் ஆதரவு இருந்துவருகின்றது.

இவரது கணவர் ஓர் இராணுவத்தளபதியால் "என் தந்தையை படுகொலை செய்த இனவெறியர்களுக்கு சாவுமணி அடித்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம்" என முழங்கிவருகின்றார் அவரே பெரும்பான்மை ஆசனங்களை கைப்பற்றுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

மற்றொரு எதிர்க்கட்சிதலைவியான ஜனபா பேகம் ஷமா (வயது 45) கணவனை இழந்த விதவை. 1981ம் ஆண்டு முஜிபூர் ரகுமானை கொலை செய்த சதிப்புரட்சியில் இவரது கணவரும் சுட்டுக்கொல்லப்பட்டார். "என் கணவரை பழிவாங்கியவரை நாட்டைவிட்டே விரட்டுவோம்" என முழங்குகிறார். இவரது பங்களாதேஷ் தேசிய முன்னணிக்கு இருபத்தைந்து ஆசனங்கள் கிடைக்கலாம்;

முன்னாள் ஜனாதிபதி எர்ஷாத்தின் கட்சிக்கு பெரும் நெருக்கடி இருந்துவருகின்ற போதும், அரசியல் சதுரங்கத்தில் ஊழல் கள்ளவாக்கு, பணபலத்தைக் கொண்டு ஜெயிக்கலாமென எண்ணுகிறார்கள். எர்ஷாத்தின் ஜாதியா கட்சியினர் களைத்துவிடவில்லை. [எஸ்]

## கலந்துரையாடல்

[நாவற்குழி]

தென்மராட்சியில் உள்ள சகல தனியார் கல்விநிறுவனங்களினதும் உரிமையாளர்களையும், அதன் ஆசிரியர்களையும் 15ந் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சிக் கல்விப்பகுதியின் நிழல் நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது; (107)

## மக்கள் மனதை கவர்ந்த எழுத்தாளர்

(நல்லூர்)

'செங்கை ஆழியான் மக்களை நேசிப்பவர்: அவர்களோடு வாழ்ந்தவர்: அவர்களுக்காக இலக்கியம் படைத்தவர். மக்கள் மனதைக் கவர்ந்த எழுத்தாளர் என்றால் ஈழத்தில் செங்கைஆழியான் ஒருவராகத்தான் இருக்கமுடியும்."

இவ்வாறு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நிகழ்ந்த செங்கை ஆழியானின் 50வது ஆண்டு நிறைவு விழாவில் கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பொன்னாடை போர்த்தி பேசுகையில் குறிப்பிட்டார்.

விழாவுக்கு கவிஞர் சோ. பத்மநாதன் தலைமைவகித்தார். பாராட்டு வழங்கும் வைபவத்தில் டாக்டர் நந்தி பேசுகையில் கூறியதாவது:

செங்கை ஆழியானை சர்வகலாசாலை மாணவனாக இருந்த காலம் தொட்டே எனக்குத் தெரியும். முப்பது வருடகாலமாக அவர் எழுதிக் குவித்திருக்கிறார். அவர் எழுதிய "காட்டாறு" நாவல் இலங்கையில் வெளிவந்த ஓரிரு தரமான நாவல்களில் ஒன்றாகும்; இவர் ஒரு இலக்கியகர்த்தா

(4ம் பக்கம் பார்க்க)

★ கல்லோயா அபிவிருத்தி திட்டத்தில்

# 10 வருட காலத்தில் 25,000 சிங்களகுடும்பம் குடியேற்றம்

**மரபுவழித் தாயகத்தில் தமிழர்களின்நிலம் பறிக்கப்பட்டு சூறையாடப்பட்டு சிங்களக் குடியேற்றம் ஆரம்பிப்பதற்கு அபிவிருத்தி என்ற போர்வையில் கல்லோயா அபிவிருத்தி சபை வழிவகுத்துக் கொடுத்தது.**

கிழக்கு மாகாணத்தில் உள்ள இங்கினியாகலை கற்பாறை 1948ம் ஆண்டு ஆயிரம் அடிகளுக்குக் கீழ் அமைதியும் சமாதானமும் குடிகொண்டிருந்த கானகத்தில் அமைந்திருந்தது. இயற்கையெழிலுடன் காட்சி அளிக்கும் பரந்த பள்ளத்தாக்கில் பட்டிப்பளை ஆறு பாய்ந்தது. 62 மைல் நீளமான பட்டிப்பளை ஆற்றின் நீரை 700 மைல் விஸ்தீரணமான இப்பள்ளத்தாக்கில் பாய்ச்சி மக்களை குடியேற்ற சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டது. இப்பள்ளத்தாக்கில் பிரமாண்டமான நீர்த்தேக்கத்தை சிறிலங்கா அரசு அமைத்தது.

### 250,000 ஏக்கர் நிலம்

250,000 ஏக்கருக்கான நிலத்தை உபயோகித்து கொள்வதும் அதனை விவசாயத்துக்கும் கைத்தொழிலுக்கும் உதவச் செய்வதுமே அபிவிருத்தித்திட்டத்தின் நோக்கமாகும். இது நீர்ப்பாய்ச்சுதற்கும், வெள்ளக்கட்டுப்பாட்டிற்கும், நீர்வீழ்ச்சி மின்சார சக்தியை உற்பத்தி செய்வதற்கு என மூன்று பிரதான காரணங்களுக்காகத் திட்டமிடப்பட்டிருந்தது.

இவற்றைக்கொண்டு அபிவிருத்தி போர்வையில் சிங்கள மக்களைக் குடியேற்றுவதே இதன் உள்நோக்கமாகவும் அன்றே இருந்தது.

அன்றைய காலகட்டத்தில் கல்லோயா பள்ளத்தாக்கில் உயர்ந்த மத்திய பிரதேசங்களில் 4000 பேரே இருந்தனர் இவர்கள் பரம்பரைச் சிங்கள கலப்பினத்தை சேர்ந்த வேடர்களாம். சமுத்திரத்தை அடுத்த பகுதிகளில் 79000பேர் வசித்தனர். இவர்களில் பாதிப் பேர் 12 சதுரமைல்களுக்கிடையில் தங்கியிருந்தனர் இங்கு 28,000 தமிழர்களும் 51,000 தமிழ் பேசும் முஸ்லிம்களும் வசித்தனர்.

## இடம்பெயர்ந்த தமிழர் முற்றுகப் பறங்கணிப்பு

### கல்லோயா அபிவிருத்திச்சபை

1949ம் ஆண்டின் 51ம் இலக்க கல்லோயா அபிவிருத்திச்சபை சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட கல்லோயா அபிவிருத்திச்சபை 1949ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் திகதி உத்தியோகபூர்வமாகக் கடமையாற்றத் தொடங்கியது.

இப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பு இச்சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பள்ளத்தாக்கில் அமைக்கப்பட்ட பிரமாண்டமான நீர்த்தேக்கத்திற்கு 1952ம் ஆண்டு ஜனவரி மாதம் நீர் விடப்பட்டது. அதுமுதல் இத்திட்டத்தின் சிற்பியான டி. எஸ். சேனநாயக்காவின் பெயரால் இது சேனநாயக்கா சமுத்திரம் என்று அழைக்கப்படுகிறது. சேனநாயக்கா சமுத்திரத்தின் நீர் பரப்பு 30 சதுரமைல்களாகும் இதன் கொள்ளளவு 770 ஆயிரம் ஏக்கர் அடிகளாகும். பள்ளத்தாக்கிலுள்ள 120,000 ஏக்கர் நிலத்துக்குச் இச்சமுத்திரம் நீர் பாய்ச்சுகிறது. பட்டிப்பளை ஆற்றுத் திட்ட சேனநாயக்கா சமுத்திர நீர்ப்பாய்ச்சல் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இலங்கையிலேயே மிகப் பெரிய நெற்பரப்புகள் இங்கே உள்ளது குறிப்பிடத்தக்கது.

### பூரண கட்டுப்பாடு

கல்லோயா அபிவிருத்திச் சபையின் ஆணைக்குள் அடங்கிய நிலப்பகுதியை இருபிரிவாக பிரித்தார்கள். அபிவிருத்தி உள்ள பகுதி, அபிவிருத்தியடையாத பகுதி என்று பிரிக்கப்பட்டது. அபிவிருத்தி செய்யப்படாத பகுதி பெரும்பாலும் குடியில்லாத வெற்று நிலமாக இருந்தது. இப்பகுதியில் அபிவிருத்திசபை குடியேற்றம், நீர்ப்பாசனம், தெருக்கள் திறத்தல் வீடுகள் கட்டல் காட்டைபயன்படுத்தல் ஆகிய விடயங்களில் பூரண கட்டுப்பாடு அதிகாரம் உடையதாய் இருந்தது. அபிவிருத்தி அடையாத பகுதியில் தமிழர்களுக்கு சொந்தமான சேனை பயிர் காணிகள் பல இருந்தன.

1949ம் ஆண்டு 4000 சிங்கள தொழிலாளர்கள் கல்லோயா அபிவிருத்தி வேலைகளில் பங்குபற்ற இப்பள்ளத்தாக்கு வந்தார்கள்.

மரபுவழித் தாயகத்தில் தமிழர்களின் நிலம் பறிக்கப்பட்டு சூறையாடப்பட்டு சிங்களக் குடியேற்றம் ஆரம்பிப்பதற்கு அபிவிருத்தி என்ற போர்வையில் கல்லோயா அபிவிருத்தி சபை வழிவகுத்து கொடுத்தது."

இப்பள்ளத்தாக்கில் வெளிமாவட்டங்களிலிருந்து சிங்களவர்கள் குடியேற்றுதல், பாதைகள் அமைத்தல் வருடத்திற்கு 2500வீதம் வீடுகள் கட்டுதல் நடவடிக்கைகளை இச்சபை செய்தது.

**மா. துரைநாயகம்**

கல்லோயா அபிவிருத்திச் சபை 1952ம் ஆண்டுதொடங்கி கல்லோயா நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கல்லோயாப்பகுதியல் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த சிங்களவர்களை குடியேற்ற நடவடிக்கை எடுத்து வந்தது.

### 300 சிங்கள குடும்பங்கள்

முதல் 300சிங்கள குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. வருடமொன்றுக்கு 2500 சிங்கள குடும்பங்கள் வீதம் மேற்படி திட்டத்தில் குடியமர்த்தப் பட்டார்கள். 10வருட காலத்திற்குள் 25000 சிங்கள குடும்பங்களை குடியேற்றுவதே சிறிலங்கா அரசின் திட்டமாக இருந்தது.

மேற்படி குடியேற்றப் பிரதேசம் முழுவதிலும் 30 சதவீதத்தை கிழக்கு மாகாண மக்களுக்கென்று இச்சபை ஒதுக்கியது கல்லோயா அபிவிருத்தித் திட்டத்தால் இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு மேற்படி குடியேற்றத்திட்டத்தில் முதலிடம் அளிக்கப்படவில்லை.

இலங்கையின் இதரபிரதேசங்களைச் சேர்ந்த பெருந்த சிங்களவரிகளை கல்லோயாவில் குடியேற்றுவதற்காக சிறிலங்கா அரசால் அனுப்பப்பட்டார்கள்.

(தொடரும்)

## இராசிபலன்

**12-02-1991**
**செவ்வாய்க்கிழமை**

மேடம்: பெரியோர் நட்பு: புதிய ஸ்தானம், குடும்ப மகிழ்ச்சி

இடபம்: மன விரோதம், கருத்துமோதல, குடும்ப அலைச்சல்.

மிதுனம்: தொழில் பிணக்கு, குடும்பசச்சரவு. உடல் உபாதை

கடகம்: உறவினர் உதவி, தொழில் லாபம், காரியசித்தி.

சிங்கம்: பழைய உறவு, தொழில் பாராட்டு. குடும்ப மகிழ்ச்சி.

கன்னி: குறைகேட்டல், பழி வாங்கல், குடும்பக் கஷ்டம், அசதி.

துலாம்: தொழில் பாதிப்பு, காரியத்தடை. கடிதத் தொல்லை, குடும்பப் பிரிவு.

விருச்சிகம்: வீட்டில் உல்லாசம், நண்பருதவி, பயணங்களால் நன்மை.

தனுசு: பயனற்றசெயல், அவமதிப்பு, குடும்பக் கஷ்டம், கவலை மிகுதி.

மகரம்: எதிர்பாராத உதவி, பெண் நட்பு, அகால போஜனம், புகழ்.

கும்பம்: நண்பர் தொல்லை, வைத்திய செலவு, அலைச்சல், மனச்சுமை.

மீனம்: மாமனார் உதவி, தொழில் மாற்றம், புதிய சிந்தனை. ஆலய தரிசனம்.

- ஜோஸ்யர்

## உண்டியல் உடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீனசந்தை வைரவர் ஆலய உண்டியல் நேற்று முன்தினமிரவு உடைக்கப்பட்டு உண்டியல் பணம் முழுவதும் திருடப்பட்டுள்ளது.

(எஸ்)

★ பற்றி எரியும் பாலைவனம்

# ஈராக்மீது பலத்த குண்டுவீச்சு ஆயிரக்கணக்கில் மக்கள் பலி

## உணவுப் பொருளுக்கு பலத்த தட்டுப்பாடு

(பாக்தாத்)

அமெரிக்க பன்னாட்டுப் படைகளின் தொடர்ச்சியான அகோர விமானத் தாக்குதலில் ஆயிரக்கணக்கான ஈராக்கிய அப்பாவிகள் கொல்லப்பட்டதாக பாக்தாத் வானொலி தெரிவித்துள்ளது.

பன்னாட்டு படைகள் பொது மக்கள் வாழும் குடியிருப்புகளை நோக்கியே தற்போது குண்டு வீச்சை மேற்கொண்டு வருகிறதாம். எனினும் இதனை சர்வதேச அமைப்புகளோ, ஐ. நாவோ கண்டிக்கவில்லையென்றும் அவ்வானொலி தெரிவித்தது.

ஈராக்கில் நூற்றுக்கணக்கான கட்டிடங்கள் தகர்க்கப்பட்டுள்ளது. வீடுகள், பாடசாலைகள் உட்பட பல நிலைகள் மீதும் கடும் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. ஆஸ்பத்திரிகள் காயமடைந்தோரால் நிரம்பிவழிகிறது. பாதிக்கப்பட்ட பெருமளவு மக்கள் வைத்திய வசதியின்றி பெரும் துன்பமடைந்து வருகிறார்கள். பல ஆஸ்பத்திரிகளில் இடமில்லாததால் மக்கள் படும் துயர் சொல்லும் தரமற்றதென செய்திகள் தெரிவிக்கின்றன.

பல இடங்களில் ஆஸ்பத்திரிகளுக்கு மருந்துப்பொருட்களுடன் வந்த வாகனங்கள் விமானத் தாக்குதலால் அழிக்கப்பட்டுள்ளனவாம். மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வைத்திய வசதிகள் தானும் இல்லையென்றால் உணவுப் பொருள் தட்டுப்பாடோ மிக மோசமாக உள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்தது. ஒரு பாண் துண்டுக்காக எத்தனையோ மைல் தூரம் சர்வதேச பத்திரிகையாளரை ஈராக் மக்கள் துரத்தி வருகிறார்களாம். தண்ணீருக்கும் பாண் துண்டுக்குமான போராட்டம் மக்களிடையே பெருமளவில் அதிகரித்து வருகிறது.

உணவுப்பொருளுக்காக அலையும் கிராமப்புற மக்கள் அந்தந்த இடத்திலே மயங்கி விழ்வதை பல பத்திரிகையாளர்கள் நேரில் கண்டுள்ளனர். இருக்கும் பொருட்களை விற்பனையாளர்கள். அதிகவிலைக்கு விற்றுவருகிறார்கள் கொள்ளை லாபம் அடிப்போருக்கு எதிராக அதிபர் சதாம் ஹுசைன் பல சட்டங்களை அறிமுகப் படுத்தியுள்ளார்.

பன்னாட்டு படைகளின் கடும் தாக்குதலையடுத்து நகர்ப்புற மக்கள் கிராமப்புறங்களை நோக்கி குடிபெயர்ந்து வருகிறார்கள் இதனால்கிராமப்புறங்களில் சகல வசதிகளுக்கும் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

யுத்தம் உக்கிரமாக நடைபெற்று, பொதுமக்கள் லட்சக்கணக்கில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளபோதும் அதிபர் ஹுசைனின் செல்வாக்கு ஈராக் முழுவதிலும் பெருமளவு அதிகரித்தே வருகிறது. எங்கும் ஹுசைனின் நாமமே காணப்படுவதாக மேற்குலக பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். ஹுசைனின் பல வர்ணப்படங்களை தாங்கிய மிக உயரமான அட்டைப் படங்கள் நாடுமுழுவதிலும் முக்கிய பகுதிகளில் வைக்கப் பட்டுள்ளது.

(சி)

## சம்பளம் கிடைத்தது

(கொழும்புத்துறை)

கைதடி ஆயுர்வேத போதனா வைத்தியசாலை ஊழியர்கட்கு கொழும்பில் உள்ள தலைமையகத்தில் இருந்து சில மாதங்களாக சம்பளம் பணம் கிடைக்காத நிலையில் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் திருமதி ம. தவத்துரையின் பெருமுயற்சியினால் அவர் கொழும்புக்குச்சென்று சம்பளம் ரூபா 1,60,000க்குரிய காசோலையைப் பெற்றுக் கொண்டு வந்து இன்றைய மிகவும் இக்கட்டான நிலையில் வங்கியில் பணமாக மாற்றிக் கொடுத்துள்ளார். (154)

## சிவராத்திரி நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

நீராவியடி ஸ்ரீவீரகத்தி விநாயகராலய மகா சிவராத்திரி விழா இன்று மாலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.

விஷேட நிகழ்ச்சியாக 'அறிவினுள் ஆவதும் டோ' எனும் பொருள்பற்றி யாழ். இந்து ஆசிரியர் திரு. த. சிவகுமாரன் சொற்பொழிவாற்றுவார். பண்ணிசை, மேளக்கச்சேரியும் இடம்பெறவுள்ளது.

0 0 0

(மானிப்பாய்)

வடலியடைப்பு ஸ்ரீமகாகாளி அம்மன் ஆலய சிவராத்திரிதினம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

இரவு நான்கு சாமப் பூசைகள் இடம்பெறுவதுடன் சிவராத்திரியின் மகிமை பற்றி சைவப்பெரியார்களின் சிறப்புரைகளையடுத்துபுராண நாடகங்களும், சிறுவர், சிறுமியரின் சிவ நடனமும் இடம்பெறவுள்ளது. (71)

0 0 0

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை ஞானவைரவர் ஆலயத்தில் இன்று சிவராத்திரி விழா சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. நான்கு சாம பூசை காலம் சமய நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

0 0 0

(பண்டத்தரிப்பு)

மாதகல் சிவன் ஆலயத்தில் சிவராத்திரி உற்சவம் இன்று இரவு சிறப்பாக நடைபெற உள்ளது.

சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் ஆலயத்திலும் சிவராத்திரி உற்சவம் நடைபெறவுள்ளது. (72)

0 0 9

(யாழ்ப்பாணம்)

சரசாலை இந்து இளைஞர் மன்றத்தின் சிவராத்திரி தின நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றது. விஷேட சொற்பொழிவு, போட்டிகள் இடம்பெறவுள்ளது.

0 0 0

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை கிழக்கு ஆத்தியம்பதி ஸ்ரீசந்திரசேகரர் விநாயகர் ஆலயத்தில் இன்று மகாசிவராத்திரிதினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆலய பிரதம குரு பிரம்ம ஸ்ரீ க. மு. ஜெகநாதக்குருக்கள் தலைமையில் 4 சாமப் பூசைகளும் இடம்பெறும். (154)

0 0 0

(உடுவில்)

உடுவில் கற்பொக்கணை பிள்ளையார் கோவிலில் சிவராத்திரி விழா இன்று நடைபெறவுள்ளது. நான்கு சாமங்களும் விசேட அபிஷேகம், பூசைகள், கூட்டுப்பிரார்த்தனைகள், சமய சொற்பொழிவுகளும், கலைமதி சனசமூக நிலைய ஆதரவில் நாடகம், இன்னிசை போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறும். நான்காம் சாமப் பூசையை அடுத்து விநாயகர் திருவுலா இடம்பெறும். (109)

### பஸ்ரா நகரத்தின் மீது—

# பன்னாட்டுப்படை குண்டுவீச்சு

# 200பேர் பலி; 500பேர் காயம்

(பக்தாத்)

ஈராக் முக்கிய நகர்ப்பகுதியான பஸ்ரா மீது நேற்று அமெரிக்க நேசப்படையினர் நடத்திய புதிய ரக குண்டு தாக்குதலில் சுமார் 200 பொதுமக்கள் பலியானார்கள் 500 பேர் காயமடைந்தனர். நகரப்பகுதியில் பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

ஏவுகணையிலும் பார்க்க இந்தக்குண்டு அதிகளவு சேதத்தை விளைவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஈராக்கிற்கு வெற்றி

ஈராக் அதிபர் திரு. சதாம் ஹூசைன் நேற்று முன்தினமிரவு வானொலியில் உரை நிகழ்த்துகையில், இறுதி வெற்றி ஈராக்கிற்கு என்றும் அதுவரை மக்கள் பொறுமையைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

## சந்திரசேகர் அச்சம்

வளைகுடா போரில் அணுரசாயனகுண்டு பயன்படுத்தும் பட்சத்தில் அப்பிராந்தியம் முழுவதுமே பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் பாரதப்பிரதமர் திரு. சந்திரசேகர் அச்சம் தெரிவித்துள்ளார்.

நேசபடைகள் 290 வான் தாக்குதல் நடத்தியதாகவும் 3 விமானங்களை ஈராக் சுட்டு வீழ்த்தியதாகவும் இதுவரை அமெரிக்க நேசபடையின் 185 விமானங்களை ஈராக் சுட்டு வீழ்த்தியதாகவும் பக்தாத் அறிவித்துள்ளது.

## பணயக் கைதிகள்

ஈராக்கில் உள்ள பொதுமக்கள் மீது அமெரிக்க நேசப் படைகள் நடத்தும் தாக்குதல்களை நிறுத்தாவிடில், ஈராக் பணயக் கைதிகளாக வைத்திருக்கும் நேசப் படையினரைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்க்க அனுமதிக்கப்போவதில்லை என ஈராக் துணைப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

## பெல்கிரேட் கூட்டம்

வளைகுடா யுத்தம் பற்றி ஆராய, மண்டல சார்பற்ற 15 நாடுகளின் அமைச்சர்கள் பெல்கிரேடில் கூட இருக்கிறார்கள்.

அமெரிக்க நேச நாடுகள் போரைத் தொடர்ந்தால், ஈராக்கும் போரை இறுதி வரை தொடரும் என்று ஈரானிய அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். அமைதித் தீர்வுக்கு மேலும் அவகாசம் தேவை என்றும் அவர் கூறினார்.

அமைதித் தீர்வுக்கு வாய்ப்புக் கிடையாதென்றும் ஈராக் தெரிவிக்கவில்லை என்றும் ஈரான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தைத் தொடருவது என்று ஈராக் அதிபர் உறுதி அளித்துள்ளதாக பக்தாதி வானொலி அறிவித்துள்ளது.

## தரை யுத்தம் ஒத்திவைப்பு

தரைப்படை யுத்தம் மேலும் 3 வார காலம் பின் போடப்படலாமென நேசப் படைகளின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

42 ஈராக் படையினர் நேச நாட்டுப் படைகளிடம் சரண் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

## 150 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்து யாழ். குடாநாட்டில் தஞ்சமடைந்துள்ள திருகோணமலையைச் சேர்ந்த 150 குடும்பங்களுக்கு அறவழிப்போராட்டக் குழு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளது.

தென்மராட்சி, வடமராட்சி தீவுப்பகுதி போன்ற இடங்களில் இந்தக் குடியிருப்புகள் அமைக்கப்படவுள்ளன.

## தியாகசீலம் திறப்பு

(மானிப்பாய்)

மானிப்பாயில் தியாகசீலம் நாளை மறுதினம் 14ந் திகதி வியாழன் மாலை 6 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது. (71)

### மக்கள் மனதை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாத்திரமல்ல சிறந்த நிர்வாகி, சரித்திரவியலாளன், புத்தகங்கள் பிரசுரிப்பவர் இப்படி பல்வேறு கோணங்களில் செயல்படுபவர். அவர் மிக விரைவாக சர்வதேச புகழ்பெறக் கூடிய நாவல்களை ஆக்கித்தர வேண்டும்" என்றார்.

இவ்விழாவில் டொமினிக் ஜீவா, வரதர், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, செம்பியன் செல்வன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் டிவகலாலா ஆகியோரும் பாராட்டுரை வழங்கினார்கள். (152)

### தமிழ் அகதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தப்பட்டதன் பின்னர் தமிழகத்தில் அமைதி நிலவுவதாகவும், தற்போதைக்கு ஆளுநர் மாற்றம் எதுவும் நடக்காது என்றும் அவர் கூறினார்.

இன்னும் பத்து நாட்களுக்குள் தமிழகத்தில் போராளிகளின் ஊடுவல் முறியடிக்கப்படும். கடந்த பல நாட்களாக பல போராளிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

### காணாமல்போன விமானம்

தெற்கு குவைத்தில் 2 விமானிகளுடன் ஒரு அமெரிக்க விமானம் காணாமல் போய் விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரே நாளில் ஈராக் மீது அமெரிக்க நேசநாட்டுப்படைகள் 2800 தடவைகள் குண்டு வீசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சோவியத் அதிபரின் சொந்தப் பிரதிநிதி வளைகுடாப் பிரச்சனை பற்றிப் பேச ஈராக் சென்றுள்ளார்.

ஈராக்கின் படை பலத்தை எவரும் குறைத்து மதிப்பிடக் கூடாதென்று அமெரிக்கபாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### அம்பாறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்றார்கள்.

இதேவேளை கடந்த 4-ம் திகதி தாண்டியடிப்பகுதியில் இவா என்னும் பொதுமகன் அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வி)

### வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலையடுத்து. இவர்கள் அனைவரும் காடுகளுக்குள் ஓடிச்சென்றபோது அங்கு மறைந்திருந்த இராணுவத்தினரால் சிறைப்பிடிக்கப்பட்டு தற்பொழுது பணயம் வைக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தினரின் பிடியிலிருந்து தப்பிவந்த ஒருவர் தெரிவித்தார்.

இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தினால் காடுகளுக்குள் பலர் இறந்தும், காயமடைந்தும் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (23)

### தேசிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகார சபையினால் கட்டப்பட்டுள்ளன.

அடுத்த மாத முற்பகுதியில் மேற்படி வீடுகள், 25 சிங்களக் குடும்பங்களுக்கும், 25 தமிழ்க் குடும்பங்களுக்கும், 25 முஸ்லிம் குடும்பங்களுக்கும் வழங்கப்பட இருக்கின்றன.

இவ்வாறான மாதிரிக் கிராமங்கள், திருமலை உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள கன்னியா, உப்புவெளி ஆகிய கிராமங்களில் அமைக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது (153)

### சுகாதார

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ் போதனா வைத்தியசாலைக்கு வழமையாக 25 பரல் டீசல் மற்றும் என்ஜின் ஓயில் கப்பல் மூலம் வருவது குறிப்பிடத்தக்கது. (153)

### இலங்கையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் அகதிகள் முகாம்களில் அகதிகளாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ் மாவட்டத்தில் 159 அகதிமுகாம்களில் 39,282 அகதிக்குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 32 அகதி முகாம்களில் 55925 பேரும், மன்னார் மாவட்டத்தில் 46 அகதிமுகாம்களில் 1லட்சத்து 7375 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 அகதிமுகாம்களில் 1431 பேரும், வவுனியா மாவட்டத்தில் 25 அகதிமுகாம்களில் 20195 பேரும். மட்டக்களப்பு மாவட்டத்தில் 52 அகதிமுகாம்களில் 57430 பேரும், அம்பாறை மாவட்டத்தில் 27 அகதிமுகாம்களில் 26138பேரும், திருமலை மாவட்டத்தில் 32 அகதிமுகாம்களில் 39234 பேரும் அகதிகளாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (153)

## கொழும்பு செல்லும் நோயாளரை பதிவுசெய்யுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளரின் காரியாலயத்தில் பதிவு செய்து கொழும்பு செல்லும் நோயாளர்களும், கொழும்பு செல்வதற்கு பதியப்படாமல் இருக்கின்ற நோயாளர்களும் இம்மாதம் 14-ம், 15-ம திகதிகளில் உடன் பதிவுசெய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முழுப்பெயர், அடையாள அட்டை இலக்கம், பிறந்த திகதி, நோயாளியின் நோய்க்குரிய ஆவணங்களுடன் வந்து பதிவுசெய்யும்படி நோயாளிகள் கேட்கப்படுகின்றனர்.

### மிதிவெடியில் சிக்கி பெண் காயம்

(நல்லூர்)

ஊர்காவற்றுறை கம்பாட்டியைச் சேர்ந்த இராசம்மா குமாரவேல் (55 வயது) என்பவர் மாடு கட்ட வயலுக்குச் சென்றபோது மிதிவெடியில் சிக்கி, ஒரு கால் இழந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த மிதிவெடிகள் ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினால் புதைக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (152)

## உணவுடன் குமண கப்பல் பருத்தித்துறை வந்தது

(யாழ்ப்பாணம்)

குமண கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறை முகத்திற்கு வந்துசேர்ந்துள்ளது.

மேற்படி கப்பலில் 3200 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் வந்துள்ளன.

23 பல நோ. கூ. சங்கங்களின் லொறிகளும் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்குச் சென்று உணவுப் பொருள்களை ஏற்றிவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (153)

### காயமடைந்த மூவர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவத்தாக்குதலில் காயமடைந்த மூவர் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

க. தேவராசா காரைநகர் (40 வயது), பொ. சிம்சன் ஜோர்ஜ் கிளிநொச்சி (21 வயது), எஸ். சோதி வட்டக்கச்சி (33 வயது) ஆகியோர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களாவர். (ஈ)

### ஆனையிறவு முகாம்மீது தாக்கு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாம் மீது புலிகள் தொடர்ந்து தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.

மோட்டார்கள், கிரனைட் ஆயுதங்களைக் கொண்டு இத்தாக்குதல் நடத்திவருவதாகவும், படையினர் எதிர்த்தாக்குதல் நடத்தி வருவதாகவும் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சர்வோதயம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வோதயத்தினால் தடைசெய்யப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது.

சர்வோதயத் தலைவர் திரு. ஆரியரத்தினவின் மனைவியின் முயற்சியினால் இப்பாத்திரங்கள் சிறிமாவோ புரத்திலுள்ள சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டன (வி)

### படையினர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

3 மைலுக்கு அப்பால் உள்ள தாண்டிக்குளத்தில் பலத்த வான் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

பிறவுண்கம்பனி தடை முகாமிற்கு அப்பால் மக்கள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

படையினர் தரைமார்க்கமாக முன்னேறும் முயற்சியில் இறங்கி இருப்பதாகவும் புலிகள் படையினரை முன்னேற விடாமல் பலத்த தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

### நேற்றும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பகுதியில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சண்டையில் இராணுவ தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பம்பைமடு, நொச்சிமோட்டை, தாண்டிக்குளம், புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகளில் விமானக் குண்டுவீச்சு நடத்தப்பட்டது.

இதேவேளை வவுனியா காமினி மகாவித்தியாலயம், யோசப் முகாம் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பொதுமக்களின் குடியிருப்புகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தியவண்ணமுள்ளனர்.

தொடர்ச்சியாக இடம் பெற்றுவரும் இராணுவஷெல் தாக்குதலையடுத்து இப்பகுதிகளிலுள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

வவுனியா நகரிலிருந்து நேற்று முன் தினம் மாலை 4-00 மணியளவில் ஜீப், ட்ரக், கவசவாகனம் சகிதம் படையினர் முன்னேற முயன்றபோது புலிகளின் மிதிவெடியில் சிக்கியதில் ஐந்து இராணுவத்தினர் கால்களை இழந்ததுடன் பலர் கொல்லப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

மாமடு இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை கண்டி வீதிவழியாக இராணுவத்தினர் வெளியே வந்த பொழுது பறநாட்டான்கல் என்ற இடத்தில் இடைமறித்து விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினார்கள்.

இம்மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஐந்து போராளிகள் வீரமரணமடைந்தனர்.

வரதன் (சத்தியசீலன் புளியங்குளம்), கருணா (பிறேம்குமார் சேமமடு) ஜனா, (விஜயகுமார் முதிரையன் கட்டு) மகான் (விஜயசுந்தரம் பதுளை) பிறேமன் (உதயகுமார் சின்னத்தம்பனை) ஆகியோரே இம்மோதலில் வீரமரணமடைந்தார்கள்.

இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவித்துள்ளனர். (வி)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 66-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு மாசி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.